# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2022

விசேட வகுப்பு ஆண்டு 6 திகதி: 18.06.2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: உஷா ஜவாகர்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**பெரிய அறிவாளி**



ஒரு சமயம் இரண்டு மாணவர்கள் ஒரு குருவிடம் கல்வி கற்கச் சென்றனர். அவர்களுள் ஒருவன் புத்திசாலி. ஆசிரியர் கற்றுத் தரும் அனைத்துப் பாடங்களையும் கற்றுத் தேர்ந்தான்.

பாப்தேவ் என்னும் மற்றொரு மாணவன் ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லை. எனவே ஆசிரியர் அவனை ஆச்சிரமத்திலிருந்து வெளியே அனுப்பிவிட்டார்.





வெளியில் வந்த பாப்தேவ் நீர் குடிப்பதற்காக ஒரு கிணற்றுக்குச் சென்றான். அந்த கிணற்றைச் சுற்றிலும் உள்ள கல் தளத்தில் வட்ட வடிவமான அழகிய பள்ளங்கள் கற்களில் செதுக்கப்பட்டது போன்றிருப்பதைக் கண்டான். சிந்தனையில் ஆழ்ந்தான். இந்த வட்ட வடிவப் பள்ளங்கள் உருவானதைப் பற்றி ஆய்வுசெய்தான். கிணற்றில் நீர் எடுத்துச் செல்ல வரும் பெண்கள் தங்கள் குடங்களை வைத்து வைத்து அந்தக் குடங்களின் உராய்வினால் இவ்வழகிய பள்ளங்கள் உருவாகியதைக் கண்டு தனக்குள் சிந்திக்கத் தொடங்கினான். சாதாரணமான குடங்கள் உராய்ந்து கடினமான கற்பாறையில் பள்ளம் விழும்போது நான் கல்லைவிடக் கடினமானவனா? கடினமான முயற்சியால் கல்வியில் தேர்ச்சி பெறலாமே என எண்ணினான்.

அவன் மீண்டும் குருவிடம் வந்து சேர்ந்தான். தனது செயல்களுக்கு வருந்தி குருவிடம் மன்னிப்பும் கேட்டான். விடா முயற்சியோடு கற்கத் தொடங்கி, விரைவில் கல்வியில் தேர்ச்சி பெற்று பெரிய அறிவாளி ஆனான். பின்பு பாப்தேவ் பிரசித்தி பெற்ற அறிஞுளகி நூல்களை எழுதி பேராசான் ஆனார்.



நீதி: முயற்சி திருவினையாக்கும்.

1 மாணவர்கள் குருவிடம் எப்படி கல்வி கற்க வேண்டும்?

______________________________________________________________________

2 பாப்தேவ் எதற்காகச் கிணற்றுக்குச் சென்றான்?

______________________________________________________________________

3 பாப்தேவ் கிணற்றடியில்  என்ன காட்சியைக் கண்டான்?

______________________________________________________________________

4 மீண்டும் குருவிடம் வந்து சேர்ந்த பாப்தேவ் என்ன செய்தான்?

______________________________________________________________________

5 இந்தக் கதையின் நீதி என்ன?

______________________________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

பின்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் போன்றவற்றை எழுதுக.

1. நான் சனிக்கிழமைகளில் தமிழ்  மொழியைக் கற்கிறேன்.
2. மயில் அழகான தோகையை விரித்து நடனம் ஆடியது.
3. அமலா பாடல் ஒன்றை இனிமையாகப் பாடினாள்.
4. சென்ற ஆண்டு வெள்ளம் பிரிஸ்பேன் நகரைத் தாக்கியது.
5. ஆசிரியர் நாடகத்தை  நன்றாக நடித்துக் காட்டினார்.

| 0 | எழுவாய | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

| **வினா இல** | **3** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **4** |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக எழுதுக.**

கோடை விடுமுறைக்கு பெரியப்பா குடும்பத்தினர் வந்த பின்பு அவர்களை நாங்கள் மெல்பேனுக்கு அழைத்துச் செல்வோம்.

________________________________________

________________________________________

சென்ற ஞாயிற்றுக்கிழமை குளிர் அதிகமாக இருந்தமையால் நாங்கள் வெளியே செல்லவில்லை.

________________________________________

________________________________________

ஆகாயத்தில் கருமேகங்கள் சூழ்ந்தவுடன் மழை "சோ" வென்று கொட்டியது.

________________________________________

________________________________________

வானில் பல நட்சத்திரங்கள் மின்னத் தொடங்க சந்திரன் உலா வரத் தொடங்கினான்.

________________________________________

________________________________________

சில வருடங்களுக்கு முன் கன்பராவில் ஏற்பட்ட காட்டுதீயினால் பல வீடுகள் பொருட்கள் போன்றவை சேதமடைந்தன.

______________________________________________

______________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிவுசெய்க.**

அவனுடைய _______________ எலும்பு உடைந்தது. (விளா, விலா, விழா)

அம்மா தேநீர் _____________ எடுத்து வந்தாள். (கழந்து, கலந்து, களந்து)

முனிவர் மன்னனுக்கு இட்ட சாபம் _________________ (பழித்தது, பளித்தது, பலித்தது).

விவசாயி _______________ அப்புறப்படுத்தினான். ( கலைகளை, களைகளை, கழைகளை)

ராமு பிறந்தநாள் ______________வை விமரிசையாகக் கொண்டாடினான்.(விழா, விலா, விளா)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**ஏதிர்ச் சொல் தருக**

கவலை ________________

பணிவு ________________

முடிவு ________________

தீமை ___________________

மறு ___________________

| வினா இல | 6 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**சொற்களை ஒழுங்குபடுத்தி வசனம் அமைக்கவும்.**

விளையாடினார்கள் / பாலனும் அமலனும் / ஓடி / மகிழ்ச்சியுடன்./

_______________________________________________________________

ஒரு / உருவாக்குகின்ற / பல / ஒன்று / சேர்ந்து / குடும்பங்கள் / சமூகத்தை /

_______________________________________________________________

கொண்டாடினார்கள் / புத்தாண்டை / தமிழ் /வாணியின் / குடும்பம்/

_______________________________________________________________

ஜல்லிக்கட்டு / அழைக்கப்படுகிறது / என / அடக்குதல் / மாட்டை /

_______________________________________________________________

படிப்பில் / விளங்கினான் / சிறந்து / கண்ணன் /

_______________________________________________________________